# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | தமிழ்மொழியும் இலக்கியமும் – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி-I

**01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) “எமதுயிருடன் ஏழ் மகிதலம் முழுவதையும் உறுக” இதில் மகிதலம் என்பதன் பொருள்,
1) ஆகாயம் 2) மைதானம் 3) மகிமை 4) பூமி

02) “புகழ்ச்சியை விரும்பிய மழவராயன்” புகழ்ச்சி என்பதன் எதிர்ப்பதம்,
1) மகிழ்ச்சி 2) முயற்சி 3) இகழ்ச்சி 4) சூழ்ச்சி

03) “மயில்போல் வேடமணிந்து நிற்கிறார்கள்” மயிலின் ஆண்பாற் சொல்,
1) அழகு 2) அளகு 3) போத்து 4) பேடு

04) கொப்பு, கூட்டம், சுற்றம், மூங்கில், என்னும் பல பொருள் தரும் ஒரு சொல்,
1) கிளை 2) வளை 3) உறவு 4) வரை

05) எனது மாமா எனக்கொரு லப்ரொப் (Laptop) வாங்கித் தந்துள்ளார். லப்ரொப் என்பதன் தமிழ்க் கலைச் சொல் வடிவம்,
1) மடிக்கணினி 2) சூட்டிகை 3) இணையம் 4) தொலைபேசி

06) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன,
1) நானிலம் 2) நால்வேதம் 3) நாற்பாதம் 5) நாற்கவி

07) இலங்கை தனது எழுபத்தைந்தாவது சுதந்திரதின விழாவைக் கொண்டாடியது. எழுபத்தைந்தாவது ஆண்டின் நிறைவிற் கொண்டாடப்படுவது,
1) வைரவிழா 2) பவளவிழா 3) அமுதவிழா 4) பொன்விழா

08) எதிர்ப்பொருள் கொண்டமைந்த இணைமொழி,
1) கண்ணும் கருத்தும் 2) பேரும் புகழும் 3) வாடிவதங்கி 4) அல்லும்பகலும்

09) பின்வருவனவற்றுள் உவமைத்தொடராக அமையாதது,
1) ஆலகாலவிடம்போல 2) வளர்பிறை போல
3) ஒல்காப் பெரும்புகழ் 5) கன்றுகளை நோக்கிவரும் பசுக்கள் போல

10) பின்வருவனவற்றுள் பழமொழியாக அமையாதது.
1) வெளிப்பகட்டைக் கண்டு ஏமாறாதே 2) சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்
3) மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம் 4) பேராசை பெரும் நட்டம்

11) பின்வருவனவற்றுள் இடையின ஓசை மட்டும் கொண்டமைந்த சொற்கள் இடம் பெறும் தொகுதி,
1) வரகு,முயல்,உழவர்,வைகை 2) வரம், வாசனை, வெற்றி,யாழ்ப்பாணம்
3) வயல்,வாழ்வு,வெள்ளை,வௌவால் 4) விடுதலை,வெள்ளம்,வேலழகன்,தேவாரம்

LMDMUnit

12) தமிழ் நெடுங்கணக்கிலுள்ள குறுகிய ஓசை கொண்ட எழுத்துக்களின் எண்ணிக்கை,
1) 247 2) 95 3) 30 4) 12

13) நாம் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடினோம். பொங்கல் என்பது,
1) பொருட்பெயர் 2) காலப்பெயர் 3) இடப்பெயர் 4) தொழிற்பெயர்

14) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்றுக் கொண்டமைந்த வாக்கியம்
1) அமைதியாக நின்றான் அவன் 2) நாம் பரீட்சை எழுதுகிறோம்.
3) தினமும் இறைவனை வணங்குவோம் 4) நாளை விழா நடைபெறும்.

15) உயர்திணை, பலர்பால், படர்க்கைப் பெயராக அமையுந்தொடர்,
1) ஆங்கில இளைஞன் ஒருவன் 2) அந்த வீட்டின் நிலவறை
3) அவர்கள் பச்சைப் பாலகர்கள் 4) மிகமிக அற்பமான சாதனைகள்

16) பறவைகள் பறந்து செல்ல பள்ளம் மேடு வானில் இல்லை. இவ்வாக்கியத்தின் எழுவாய்
1) பறந்து 2) பள்ளம் மேடு 3) பறவைகள் 4) வானில்

17) நியூற்றன் தற்பெருமை இல்லாதவர். தற்பெருமை என்பதைப் பிரித்தால்,
1) தன் + பெரிது 2) தனது + பெருமை 3) தற் + பெருமை 4) தன் + பெருமை

18) பாரதியாரால் “தம்பி” என அழைக்கப்பட்டவர்
1) பரலி.சு.நெல்லையப்பர் 2) பா. சிவபாலன் 3) சோதி 4) அறிவழகன்

19) பெருங்குடி வணிகர் மாநாய்கன் புதல்வி
1) பாண்டிமாதேவி 2) கண்ணகி 3) கௌசலை 4) கைகேயி

20) சர்வதேச தாய்மொழித்தினம் கொண்டாடப்படும் தினம்
1) வைகாசி 01 2) மாசி 14 3) ஐப்பசி 01 4) மாசி 21

(20 x 2 = 40 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி -II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிந்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
அ) செய்தித்தாளின் பயன்கள்
ஆ) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
இ) கல்வியின் சிறப்புக்கள்
ஈ) என் மனங்கவர்ந்த இயற்கைக்காட்சி
உ) ஒழுக்கம் உயர்வு தரும் (பேச்சு)

(20 புள்ளிகள்)

02) உமது பாடசாலைத் தோட்டம் பற்றி உமது நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

03) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) "இலங்கை வளம்" பாடியவர் யார்?
2) குறும்பா எத்தனை அடிகளைக் கொண்டது?
3) செல்வந்தனது பேராசையை அழித்தவன் யார்?
4) மழவராயன் கற்றுக்கொண்ட இலக்கியங்கள் இரண்டு தருக?
5) "தன்மானமிருந்தால் எங்களை விட்டுவிட்டு நீங்கள் வாழுங்கள்" யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
6) ஒருவன் எவற்றால் மேன்மையடைய முடியாது?
7) பறவைகள் மகிழ்வுடன் பாடித்திரியக் காரணங்கள் நான்கு தருக?
8) மரங்களால் கிடைக்கும் பயன்கள் நான்கு தருக?
9) வள்ளுவர் எப்படிப்பட்டவர்களுக்குக் கடைத்தேற வழியில்லை என்கிறார்?
10) இராமன், காட்டில் நடந்த பரீட்சையில் எவ்வாறு வெற்றி பெற்றான்?

(20 புள்ளிகள்)

04) பின்வருவனவற்றை வைத்துக் கருத்துள்ள வாக்கியம் எழுதுக.
அ) மின்னி மின்னி
ஆ) நடுநடுங்கி
இ) நாற்று
ஈ) அங்குமிங்கும்
உ) தலைமழை

(05 புள்ளிகள்)

05) பின்வருவனவற்றில் உள்ள வழுக்களை (எழுத்துப்பிழைகளை) இனங்கண்டு மீண்டும் சரியாக எழுதுக.
சிண்ணச் சிண்ண மலைத்துலிகள் சேர்த்து வைப்பேனே
மிண்ணல் ஒழியில் நூளெடுத்து கோர்த்து வைப்பேனே

(05 புள்ளிகள்)

LMDMUnit